| | | |
|---|---|---|
| சாட்சி : DW 1<br>ஜார்ஜ்எட்மெண்ட்<br>பெலிக்ஸ் | அ.வ.எண்.92/2016 | 04.02.2025 |

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

3) ஜான் செல்வநாதனுக்கு எத்தனை குழந்தைகள் என்றால் 5 பேர் ஆவார், நான் மற்றும் டெய்சிபிரிஜிட்ஸ்சோபியா, கார்மல்சகாயாஉமா, பிரேமாபெனில்டாமேரி, ஜெட்ரூட்ரமா ஆவார்கள். எனது தகப்பனாரும் எனது தாயார் குழந்தைதெரஸ் 1 மற்றும் 2 அட்டவணை சொத்துக்களை கிரையம் பெற்றார் என்றால் சரிதான். மேற்படி கிரைய ஆவணம் 27.02.1995 ல் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி 1,2 அட்டவணை சொத்துக்கள் எனது தாய் மற்றும் தகப்பனார் இருவர் பெயரிலும் கிரையம் பெற்ற காரணத்தினால் இருவருக்கும் சமபங்கு உள்ளது என்றால் சரியல்ல, எனது தகப்பனார் தான் முழு தொகையும் கொடுத்து கிரையம் பெற்றார். 1,2 அட்டவணை சொத்துக்கள் எனது தாயார் குழந்தைரெஸ்க்கு பெயரளவில் பாத்தியப்பட்டது என்றும் நான் வழக்கில் எந்த கட்சியும் செய்யவிலலை என்றால் சரியல்ல, கட்சி செய்துள்ளேன்.

4) மேற்படி எனது தாயாருக்கு உரிமையான 2 ல் 1 பாகத்தை வாதிக்கு கிரையம் செய்து கொடுத்துவிட்டார் என்றால் சரிதான், ஆனால் அது தவறானதாகும், மேற்படி ஆவணமே செல்லத்தக்கதல்ல. தாவா சொத்துக்களை பொறுத்து கிரையம் ஏற்பட்ட விபரம் எனக்கு 2015 ம் ஆண்டிலேயே தெரியும் என்றல் சரியல்ல எனக்கு தெரியாது. 2016 ம் ஆண்டு வழக்கு தாக்கல் செய்யும் வாதி மேற்படி விபரங்கள் அனைத்தையும் குறிப்பிட்டு தான் தாக்கல் செய்தார் என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்ததற்கு பின்னிட்டு தாவா 1,2 அட்டவணை சொத்துக்களில் சரிபாகத்தை எனது தாயார் விற்பனை செய்தது தவறு என்று ஏதேனும் நடவடிக்கை எடுத்தேனா என்றால் பாகப்பிரிவினை

கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். மேற்படி பாகப்பிரிவினை வழக்கு 1,2 அட்டவணை சொத்தில் 12 ல் 1 பாகம் தான் எனக்கு பாத்தியப்பட்டது என்று கட்சி செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. அதற்கு பின்னிட்டு முழு சொத்துக்களும் எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

5) தாவா 1,2 அட்டவணை சொத்துக்களில் எனது பாகத்தை தவிர எனது சகோதரிகளின் பாகத்தையும், எனது தாயாரின் பாகத்தையும், எனது தாயாருக்கு உரிய சொத்தையும் வாதி கிரையம் பெற்று விட்டார் என்றால் மேற்படி ஆவணம் செல்லத்தக்கதல்ல. எனது தகப்பனார் காலத்தில் இருந்து தாவா சொத்துக்களில் வாதி குத்தகை சாகுபடி செய்து வந்தார் என்றால் சரியல்ல. மேற்படி சொத்துக்களில் தற்போது 12 ல் 11 பாகத்தில் உரிமையாளர் என்ற முறையிலும் 12 ல் 1 பாகத்தில் குத்தகைதாரர் என்ற முறையிலும் அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல.

6)எனது பெயரில் கிரையம் பெற்ற சொத்தையும் எனது தாய், தகப்பனார் தான் சாகுபடி செய்து வந்தார்கள் என்றால் சரிதான். எனது தந்தை இறந்த பிறகு எனது தாயார் நேரடி சாகுபடி செய்ய இயலாத காரணத்தினால் மேற்படி சொத்துக்களை வாதியிடம் குத்தகை சாகுபடிக்கு கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி சொத்து தான் தாவா 4 வது அட்டவணை சொத்தில் வரிசை எண் 9 ஆக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்த பிறகு எனது பெயரில் உள்ள 4 வது அட்டவணை 9 வரிசையில் உள்ள சர்வே எண்.112/2 சொத்தை என்னிடம் ஒப்படைக்கவேண்டும் என்று வாதியிடம் நான் தகராறு செய்தேன் என்றால் சரியல்ல. மேற்படி தகராறு சம்மந்தமாக கல்லக்குடி காவல்நிலையத்தில் புகார் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால்

சரிதான், ஆனால் எனது சொத்தை மிரட்டி வாங்கவேண்டும் என்பதால் புகார் கொடுக்கப்பட்டது. அதற்கு பின்னிட்டு 2 ம் பிரதிவாதியை அடியாளாக பயன்படுத்தி ஒரு புகலான ஆவணம் எழுதிக்கொடுத்து வாதியிடம் இருந்து சொத்து அபகரிக்க முயற்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. தாவா கிராமத்தில் ஒரு செண்டின் சந்தை மதிப்பு தற்போது ரூ.22,000/- ஆகும். 2ம் பிரதிவாதியிடம் எந்த கிரைய தொகையும் பெறாமல் ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி ஆவணம் உரிய தொகையை பெற்றுக்கொண்டு தான் எழுதிக்கொடுத்துள்ளேன் என்பதை காட்ட என்னிடம் ஆவணம் ஏதேனும் உள்ளதா என்றால் ஆவணம் எதுவும் இல்லை கிரைய ஆவணம் மட்டும் தான். மேற்படி கிரைய ஆவணத்தில் எவ்வளவு தொகை என்று குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தை பார்த்தால் நான் உண்மையான கிரைய தொகை பெற்றுக்கொண்டு தான் எழுதிக்கொடுத்தேன் என்று தெரியவரும் என்றால் தற்போதைய சந்தைமதிப்பு ரூ.22,000/- ஆகும், நான் ஆவணம் ஏற்பட்ட காலக்கட்டத்தில் உள்ள சந்தை மதிப்பிற்கு கிரைய ஆவணம் எழுதியுள்ளேன்.

7) நான் மேற்படி சொல்லும் விபரங்கள் தவறானது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் 3 வது அட்டவணை சொத்தின் சர்வே எண்.144/1, 144/2 யார் பெயரில் உள்ளது என்றால் எனது அப்பாயி இருதய மேரிபெயரில் உள்ளது. எனது அப்பாயிக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் 5 பிள்ளைகள் ஆவார்கள், லூர்துசாமி, மேரிஸ்டெல்லா, ஜான்செல்வநாதன், தேக்கலாமேரி, லாசர் ஆவார்கள். இருதயமேரியின் மகன் ஜான்செல்வநாதன் என்ற முறையில் எனது தாயார் மற்றும் சகோதரிகளுக்கு தாவா 3 வது அட்டவணை சொத்தில் பாகம் உள்ளது

என்றால் எனது தகப்பனாருக்கு உரிய பாகத்தில் எனக்கும் எனது சகோதரிகளுக்கும் பாகம் உள்ளது. தற்போது வரை தாவா 3 வது அட்டவணை சொத்தை பொறுத்த பட்டா இருதயமேரி பெயரில் தான் உள்ளது என்றால் சரிதான். மேற்படி இருதயமேரிக்கு பின்பும், எனது தகப்பனார் இறந்ததற்கு பின்பும் எனது தாயார் தான் சொத்துக்களை அனுபவம் செய்து வந்து வாதிகளிடம் குத்தகைக்கு கொடுத்து குத்தகை தொகையை பெற்று வந்தார் என்றால் சரியல்ல, குத்தகைக்கு கொடுக்கவில்லை.

8) எனக்கும் வாதிக்கும் பிரச்சனை ஏற்பட்ட பின்பு தாவா 3 வது அட்டவணை சொத்தின் சுவாதீனத்தில் இருந்து வாதியை வெளியேற்ற வேண்டும் என்று முழு சொத்தையும் தேக்கலாமேரி மற்றும் லாசருக்கு மட்டும் சொந்தமானது என்று பொய்யாக ஆவணம் ஏற்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல, எனது அத்தை மற்றும் சித்தப்பா ஆகியோரின் பாகத்தை மட்டும் தான் கிரையம் பெற்றுள்ளேன். நாளது தேதி வரை தாவா 3 வது அட்டவணை சொத்தை வாதி தான் குத்தகை சாகுபடி செய்து வருகிறார் என்றாலும் எனது தாயார் தான் நிர்வாகி என்ற முறையில் குத்தகை தொகை பெற்றுவருகிறார் என்றாலும் சரியல்ல, குத்தகைக்கு கொடுக்கவில்லை. அதேபோல் இருதயமேரி அம்மாளுக்கு 4 வது அட்டவணை சொத்துக்களில் வரிசை எண்.5,6,7 உரிமையாக இருந்தது என்றால் எனது அப்பாயி பெயரில் இருந்த சொத்தை வாய்மொழி பாகப்பிரிவினை அடிப்படையில் எனது சித்தப்பா லாசருக்கு ஒதுக்கிவிட்டார்கள். மேற்படி லாசருக்கு ஒதுக்கப்பட்டது என்பதற்கு ஆவணம் ஏதேனும் உள்ளதா என்றால் வாய்மொழி பாகப்பிரிவினை தான் ஆவணம் எதுவும் இல்லை.

9) நான் மேற்சொன்னபடி லாசரின் 4 வது அட்டவணை சொத்துக்களில் வரிசை எண்.5,6,7 சொத்து என்றால் அதில் வாதி அனுபவம் செய்து வருவதை தடுக்க எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல, மேற்படி சொத்தை நான் கிரையம் பெற்றுள்ளேன். நான் லாசரிடம் இருந்து கிரையம் பெற்றதற்கான ஆவணம் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். மேற்சொன்ன 4 வது அட்டவணை சொத்துக்களில் வரிசை எண்.5,6,7 குறிப்பிட்டுள்ளதை பொறுத்து லாசருக்கு பாத்தியப்பட்டது என்பதை காட்ட என்னிடம் ஆவணம் உள்ளதா என்றால் உள்ளது அவர் பட்டா வாங்கியிருந்தார். நான் சொல்லும் பட்டா பி.வா.சா.ஆ.4 ஆவணத்துடன் இணைக்கப்பட்டுள்ள பட்டா தான் என்றால் சரிதான். மேற்படி பட்டா உண்மையான ஆவணம் என்றால் என்னிடம் காட்டப்படும் பட்டா 12.11.2018 தேதியிலும் இருதயமேரி பெயரில் இருக்க வாய்ப்பில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

10) லாசர் பெயரில் மோசடியாக பட்டா ஏற்பட்டது என்று எனது பெயரிலும், கிராம நிர்வாக அலுவலர் தனசேகர் என்பவர் பெயரிலும் காவல் துறையில் புகார் கொடுக்கப்பட்டது என்றால் இல்லை. மேற்படி விபரம் எனக்கு தெரியும் என்றாலும் உரிமையியல் வழக்கு நிலுவையில் இருப்பதால் வழக்கில் பார்த்துக்கொள்ளும்படி சொல்லிவிட்டார்கள் என்றால் சரியல்ல. 4 வது அட்டவணை சொத்தில் வரிசை எண் 1 ல் கண்ட சொத்து யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் எனக்கு பாத்தியப்பட்ட சொத்தாகும். மேற்படி சொத்தை பொறுத்து ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நியாபகம் இல்லை, ஆனால் ஆவணம் உள்ளது. மேற்சொன்ன சொத்து ஜேம்ஸ் என்பவருக்கு உரிமையான சொத்து என்றால் சரியல்ல. சந்தனமேரி யார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

11) மேற்படி சந்தனமேரி ஜேம்ஸ் என்பவரின் தாயார் என்றால் சரியல்ல, காணிக்கைமேரி தான் அவரது தாயார் ஆவார். மேற்படி காணிக்கைமேரி பெயரில் தான் 4வது அட்டவணை 1வது வரிசை சொத்தை பொறுத்து பட்டா உள்ளது என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக 14.02.2025 அன்று ஒத்திவைக்கப்படுகிறது)